

"நானும் எத்தனையோ பேரைப்போல பிறந்தேன், வளர்ந்தேன், வாழ்ந்தேன் என்று இருந்து விட்டிருப்பேன். ஆனால் சிறு வயதில் இருந்து எனக்குப் படிக்கவேண்டும் என்ற வெறி எப்படியோ வந்து விட்டது. அதுதான் இன்று நான் இந்த நிலைக்கு வரக் காரணம்..." என்கிறார் இன்று உலக அளவில் புகழ்பெற்ற பெண்மணிகளில் ஒருவராக விளங்கும் கோவை மனையியற் பல்கலைக்கழகத்தின் வேந்தராக விளங்கும் திருமதி. ராஜம்மாள்தேவதாஸ்.

உலகளாவிய நிலையில் மனையியல் துறையில் எந்த ஐயப்பாடு எழுந்தாலும் திருமதி. தேவதாஸைக் கேளுங்கள் என்கிற அளவிற்கு அத்துறையில் மிகப்பெரும் சாதனைகளைப் புரிந்திருக்கும் பெண்மணியை நேரில் பார்க்கும்போது ஆச்சர்யமாக இருக்கும். 'இவரா இத்தனை சாதனைகளைப் புரிந்தார்' என வியக்கும் அளவிற்கு மிக எளிய உருவம், இனிய பேச்சுக்கள், நம் வீட்டில் இருக்கும் ஒரு மூத்த வயதான பெண்மணியின் பழுத்துக் கனிந்த தோற்றம்.

**"அம்மா, நீங்கள் எப்படி இத்தனை சாதனைகளை எட்டிப் பிடித்தீர்கள்?" என்றபோது கனிவாகச் சிரித்தார்.**

"எல்லாம் இறைவன் அருள் அம்மா. என் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும்

# வேலையே வேகத்தைக் கொடுக்கிறது!

இறைவனின் துணையோடுதான் பல சோதனைகளை வென்றேன்..." என்று அவர் தன் வாழ்க்கையின் ஆரம்ப நாட்களைச் சொன்னபோது பிரமிப்பாகத்தான் இருந்தது.

"எல்லோரையும் போல எனக்கும் சின்ன வயதிலேயே 1935-ல் கல்யாணம். தாய்மாமாவிற்கு மனைவியானேன். அவர்கள் அந்தக் காலத்திற்கேற்ற பழைய நம்பிக்கைகளில் ஊறியவர்கள். படிக்கிறேனே என்று அழுத என்னை அம்மா சமாதானப் படுத்தி கல்யாணம் செய்து வைத்தார்கள். ஆனால் அடுத்த வருடம் எஸ்.எஸ்.எல்.சி. எழுதுவேன் என்று சொல்லித்தான் கல்யாணத்திற்குச் சம்மதித்தேன். அதேபோல எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்த பிறகு,

"இனிமே படிப்புகிடிப்புன்னு மூளைய குழப்பிக்காதே. வீட்ல அழகா குடித்தனம் நடத்தும் வழியைப் பாரு"என்று கண்டிப்பாக மாமியார் சொல்லிவிட்டார். அடுத்த வருடமே மகன் பிறந்தான்.




என்னால் சில வருடங்களுக்குப் பிறகு சும்மா இருக்க முடியவில்லை. அப்போது விழுப்புரத்தில் கணவர் பணியாற்றிக் கொண்டிருந்தார். அங்கே பக்கத்தில் மரத்தொட்டி வைத்திருந்த ஒரு நல்லவர் எனக்காக கல்லூரியில் அப்ளிகேஷன் வாங்கிப் போட்டார். எனக்குச் சென்னையில் கல்லூரியில் இடமும் கிடைத்தது. மெதுவாகக் கணவரிடம் இதைப் பற்றிச் சொன்னேன். முதலில் மறுத்தாலும் பிறகு

ஒத்துக் கொண்டார்கள். பி.யூ.சி.க்குக கஷ்டப்பட்டு அனுமதி வாங்கிச் சென்னைக்கு வந்தேன்.

எனக்குக் கணிதவியலில் மிகவும் ஆர்வம். பி.யூ.சி. முடித்து மீண்டும் கணவரிடம் மிகவும் பயந்து பர்மிஷன் வாங்கி பி.ஏ. சேரப் போகிறேன். அப்போது ராணிமேரிக் கல்லூரி முதல்வர் திருமதி கே.எம்..மையர் என்னை அழைத்தார். "ஹோம சயின்ஸ் எடுதது பி.எஸ்ஸி. படி, உனக்கு சீட் தருகிறேன்" என்றார். ஹோம் சயினஸ என்றால் என்னவென்றே தெரியாது எனக்கு. ஆன மட்டும் மறுத்துப் பார்த்தேன். எனக்கு மற்ற கல்லூரியில் உதவித்தொகை தருகிறார்கள் என்றேன்." அதைப் போல இரண்டுமடங்கு தருகிறேன் இங்கு படி'' என்றார். ஆரம்பத்தில் ஆண்டவன் சித்தம் என்றேனே அதுதான் இது.











அப்போது மனையியல் இந்தியாவிறகுப் புதியது. என் கணவர் கூட கேலி செய்வார், இதென்ன சமையல், சாப்பாடுககு ஒரு படிப்பா என்று. நான் பி.எஸ்ஸி ஹோம சயினஸ் சேர்ந்து படித்த போது அதறகான சரியான பாடததிட்டஙகளோ, ஆசிரியரோ எதுவும் கிடையாது. நாஙகளாக ஒவ்வொன்றும் தெரிந்து கொண்டோம். மகளிா கிறித்துவக் கல்லூரியிலும் மனையியல் வளா்நதது. அங்கும் இஙகுமாக படிததோம்.''



**"அபபோது உங்கள் வீட்டுச் சூழநிலை, குழநதை இதையெல் லாம் எப்படிச் சமாளித்தீர்கள்?''**

அவா சிரிததார். "அதெல்லாம தனிககதை. அந்தக் காலத்தில் திருமணமான பெண வெளியூா வந்து ஹாஸ்டலில் படிக்கிறாள் என்றால் எததனை பேசசுகள் இருக்கும்? அதே போல மகன் சின்னககுழநதை, வீட்டிலிருந்து லெட்டர் வந்தால் பிரித்து படித்து முடிப்பதறகுள் கைநடுங்கும், குழநதைக்கு ஏதாவது உடம்புக்கு என்னமோ என்று. அத்தனையும் மீறி படிக்க வேண்டும் என்ற ஆர்வம். அதுவும் மனையியல் துறையில் புதிதாக நாஙகளே எல்லாம் திரட்ட வேண்டியதாக இருநதது எல்லாம் ஒரு சவாலாகவே அமைநதது. அதேபோல ஒரு லெவலுககு மேல் என் கணவா என்னைப புரிந்து கொண்டு விட்டாா. 'இவள் ஏதோ சாதாரணமாக வீட்டோடு இருக்க வேண்டியவள் இல்லை' என்று. எனவே அவா



பிறகெல்லாம் மிகவும் ஊக்கப்படுத்த ஆரம்பித்தார். எனவே ஆரம்ப நாட்களில் என் மன உறுதி என்றால் பிறகெல்லாம் முழுக்க என் கணவரின் ஒத்துழைப்புதான்."

**"பி.எஸ்ஸி.க்கு அப்புறம் என்ன செய்தீர்கள்?"**

"எம்.எஸ்ஸி, பிறகு பி.எச்டி செய்தேன். பிறகு ராணிமேரிக் கல்லூரியிலேயே பேராசிரியாக சேர்நதேன். அபபோதுதான் ஐயா அவினாசி லிங்கம அவர்கள் கல்வித்துறை அமைசசராக இருந்தார். அவரைப் பல சமயங்களில் சந்திக்கும் வாய்ப்பு கிடைததது. மேலபடிப்பிறகாக அமெரிக்காவிலிருந்து அழைப்பு வந்த போது ஊக்குவித்தவரும் அவர்தான். நான மேல்நாடு சென்ற அந்த நாளை மறக்கவே முடியாது. 1947 ஆகஸ்ட 15 சுதந்திரம் கிடைத்தது. நான் 17ந் தேதி கப்பலேறினேன்..."

இந்தப் பெண்மணியின் கல்வித்தாகம் இவரை உயர உயர ஏற்றியது. அமெரிக்காவில் ஓயாத படிப்பு, ஆராய்ச்சி என மனையியல் துறையில் கொடிகட்டிப் பறந்து மிகச் சிறப்பான முறையில் தேர்ச்சி பெற்று இந்தியா வந்தார்.

"நான் அமெரிக்கா போகுமுன் ஐயா அவர்களிடம் நீங்கள் மனையியல் கல்லூரி ஒன்று ஆரம்பியுங்கள். நான் வந்து விடுகிறேன் என்ற போது அவர், 'முதலில் உங்கள் படிப்பை முடியுங்கள். அப்புறம் பார்க்கலாம்'' என்றார். ஏனென்றால் ஹோம்சயின்ஸிற்காக ஒரு கல்லூரியா என்பது அந்தக் கால கேள்வி. ஆனால் நாம் உணவு முறைகளில் எத்தனை பின்தங்கி இருக்கிறோம் என்று ஆய்வுரீதியாக உணர உணர பல மாற்றங்களை இந்தியா முழுக்க செய்ய விரும்பினேன்.





என் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்சசி ஒன்று உண்டு. அமெரிககாவிலிருந்து திரும்பியவுடன் மத்திய அரசுப்பணியில அழைப்பு வர சேர்ந்து விட்டேன். கிராமப்புறங்களுக்கு நிறைய டூர் போவேன். உத்தரப்பிரதேசத்தில் ஒரு கிராமம். அங்கே பால் அபரிமிதமான உறபத்தி. அங்கே ஒரு பெண்ணின் குழந்தை நோஞ்சானாக அத்தனை வியாதிகளின் இருப்பிடமாக இருந்தது. வீட்டில் எங்கு பார்த்தாலும் பால்தான். தன் குழந்தைக்கு வீட்டில் மிகுந்து கிடக்கும் பாலைக் கொடுத்து வந்தாலே போதும என்பது கூட தெரியாத அறியாமை. அதே போல கருவுற்ற பெண்களில் ஏராளமானவாகள் இரத்த சோகையால் பாதிககப்பட்டிருந்தனர். நம் வீட்டில் சுற்றுப் புறத்தில் கிடைக்கும் எளிமையான உணவுப் பொருட்களைக் கொண்டு அரோக்கியமாக வாழலாம் என்பதே தெரியாத நிலை.

மனையியலுக்கு ஒரு படிபபா என்றார்கள். ஆனால் வாழ்க்கையோடு ஒட்டிய இந்தக் கல்வியின் மூலமாக சமூகத்தில் மிகப் பெரும ஆரோக்கியப் புரட்சியையே ஏறபடுதத வேண்டும என்ற வெறியே எனககுள் மூண்டது. நிறைய உழைததேன. நம நாட்டிற்கு ஏற்ற, ஏழை எளியவர்க்கு உகந்த உணவுகளைப் பற்றிய நிறைய ஆராயச்சிகளைச செய்தோம."

இவருடைய ஆய்வுகளும், கருத்துக்களும இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் பாராட்டுக்களைப் பெறறன. தமிழக அரசு, இநதிய அரசு, மறறும் தொண்டு நிறுவனங்கள் உணவு, ஊட்டச்சத்து சம்பநதமான பல ஆயவுகளுக்கும், முன்னேறறத்திற்கும் இவரை அலோசனை கேட்க ஆரம்பித்தன.

இந்த நிலையில் தமிழகத்தில் அவினாசி லிங்கம் செட்டியார்

அவர்கள் தன் அமைச்சர் பணி முடிந்து கோவை திரும்பினார். ராஜம்மாள் அமெரிக்கா போகுமுன் கேட்ட கேள்வி அவருடைய சிந்தனையில் உழன்று கொண்டே இருந்தது. முதலில் நான்காண்டுகள் கல்லூரியை ஆரம்பித்து நடத்தி வந்தார். திருமதி தேவதாஸை முதல்வர் பொறுப்பேற்க அழைக்க, இதற்காகவே காத்திருந்த ராஜம்மாள் உடனே மத்திய அரசுப் பணியைத் துறந்து கோவை வந்து விட்டார்.

அன்று தொடங்கியது மனையியற் கல்லூரியின் வளர்ச்சி. 'இதுக்கு ஒரு காலேஜா' என வழக்கமான கேலி. வெறும் நாற்பத்தியைந்து மாணவிகள். ஹோம் சயின்ஸ் சேர்றீங்களா? எனப் போய்க் கேட்க வேண்டிய நிலை. இன்று பல்லாயிரக் கணக்கான மாணவிகள் பல்கிப் பெருகி எத்தனை வளர்ச்சி!

"நினைக்கும் போது பிரமிப்பாகத்தான் இருக்கிறது. எல்லாம் இறைவன் அருள். ஐயாவின் ஊக்குவிப்பு. எத்தனையோ படிகளைத் தாண்டி வந்து விட்டோம். கிராமப்புறப் பெண்களையும் வரவழைத்து அவர்களுக்கும் பயிற்சி தருகிறோம். மாணவிகளின் படிப்பு வாழ்க்கையோடு இயைந்ததாக இருக்க எத்தனையோ திட்டங்களை வைத்திருக்கிறோம். சமூகசேவை இங்கு கட்டாயப் பாடம். ஏழைகளின் சிரமம் தெரியாத மாணவிகளே இங்கு இன்று இல்லை." என்று பெருமிதத்தோடு கூறுகிறார் எழுபது வயதைக் கடந்த இந்த இனிய மூதாட்டி.

இத்தனை வயதிலும் அவர் தூங்குவது நான்கு மணிநேரங்கள்தான். எப்போதும் ஆராய்ச்சி, படிப்பு, வெளிநாட்டுப் பயணம், மாநாடுகளில் உரை என நேரமே இல்லாமல் பறக்கிறார். காந்திகிராம் இன்ஸ்டிடியூட்டில் டிரஸ்டி, தமிழக அரசு பிளானிங் கமிஷன் (நியூட்ரிஷியன் அண்ட் ஃபேமிலி ப்ளானிங்) உறுப்பினர், இந்திய அரசு ரூரல் டெவலப்மெண்ட் போர்டின் மெம்பர், அஸ்ஸாம் அரசின்... இப்படிப் பட்டியலிட்டு நீளுகிறது இவருக்கு இப்போதுள்ள பொறுப்புக்கள். பெற்ற பரிசுகளும், அவார்டுகளும் கணக்கிலடங்காதவை. அமெரிக்காவில் ஒரேகான் மாநில பல்கலை கழகம், கொலம்பியாவிலுள்ள பல்கலைக் கழகம் அளித்த ஆராய்ச்சிப் படிப்பிற்கான பட்டங்களிலிருந்து இன்னும் பல வகையில் நீளும் பட்டியல்... எப்படி இவருக்குச் சாத்தியமாகிறது!

"ரொம்ப சிம்ப்பிள். எனக்கு வேலையே வேகத்தைக் கொடுக்கிறது. என் கைக்கு வரும் பொறுப்பை முழு மனதோடு எடுத்துக் கொண்டு அதை மிகச் சிறப்பாக எப்படி முடிப்பது எனப் பாடுபடுகிறேன். மனையியல் என்றால் என்னவென்றே தெரியாத நான் அதை படித்தே ஆகவேண்டும் என்றபோது படிக்க வில்லையா? அதை எனக்கு மிகவும் பிடித்த சப்ஜெக்டாக மாற்றிக் கொள்ளவில்லையா? அப்படித்தான்" என்கிறார்.

**பல்லாண்டுகளாக சமூகம் சார்ந்த, அவர்களின் மேம்பாட்டிற்காகவே கல்விப் பணி ஆற்றும் இவரின் அறிவுரை சமூகத்திற்கு என்ன?**

"இன்றைய வாழ்க்கை ரொம்ப சிக்கலாகி விட்டது. அதைச் சரிசெய்து கொண்டால் நல்ல விதமாக வாழலாம். ஒவ்வொருவருக்கும் இலட்சிய வீடு இனிய வீடாக இருக்க வேண்டும். குடும்ப உறவுகளை நல்லவிதமாக அமைத்துக் கொள்ள வேண்டும். முடிந்தவரை தங்கள் தேவையைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். சுற்றுப்புறத்தோடு நல்ல நட்பு. ஆரோக்கியமான உணவு, வயதானவர்



களுக்கான சரியான இடம் இவை இருந்தால் இன்றைய சமூகத்தில் நிலவும் பல குழப்பங்கள் மறையும்" என்றார்.

**"இளைய தலைமுறைப் பெண்களுக்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்றோம்.**

"புத்திபூர்வமான கடின உழைப்பு, அமைதியான இல்லறம், இலட்சியத்தோடு கூடிய வாழ்க்கை அவர்களுக்கு உயர்வைத் தரும்" என்றார்.

எளிய குடும்பத்தில் பிறந்து, தன் இலட்சியம் கடின உழைப்பு இரண்டின் காரணமாகவே இன்று பிரமிக்கத்தக்க அளவில் உயர்ந்திருக்கும் இவரைவிட வேறொரு வழிகாட்டி நமக்கெல்லாம் உண்டா என்ன?

**- மஞ்சுளாரமேஷ்**

படங்கள் : **சுரேஷ்**